# ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ கள்ளப்பிரான் ஸ்வாமி
# கோயில் வரலாறு



பெரிய கோபுரம்

**கோயில் வெளியீடு**

ஸ்ரீ



## ஸ்ரீ வைகுண்டம்

## ஸ்ரீ கள்ளப்பிரான் ஸ்வாமி

# கோயில் வரலாறு


எழுதியவர் :

**திரு. மே. வே. நெல்லையப்ப ஐயர் அவர்கள்**

*தமிழாசிரியர், போர்டு உயர்தர ஆண் பாடசாலை, ஸ்ரீ வைகுண்டம்.*


*ஆழ்வார் திருநகரி*

திரு. பொன். சடகோபராமாநுஜாசாரியார், M. O. L. *அவர்களால்*

*பார்வையிடப்பெற்றது.*


வெளியிடுவோர் :

**திரு. K. V. சுப்பையா பிள்ளை, B. A.,**

தேவஸ்தான எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர், ஸ்ரீவைகுண்டம்.

*சாது அச்சுக்கூடம்,*

*இராயப்பேட்டை, சென்னை*

**1943**

# பதிப்புரை

சென்னை, இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழக ஆணையாளர், திருவாளர் - ராவ்பகதூர் - C. M. இராமச்சந்திரன் செட்டியார், அவர்கள் B. A., B. L., F. R. G. S., எல்லா அறநிலையங்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கைக்கு இணங்க ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகள்ளப்பிரான் கோயில் வரலாறு எழுதப் பெறுவதாயிற்று. இதனை எழுதி உதவியவர் ஸ்ரீவைகுண்டம், போர்டு உயர்தர ஆண் பாடசாலைத் தமிழாசிரியர் திரு. மே. வே. நெல்லையப்ப ஐயர் அவர்கள் ஆவர். இவர்கள் வரலாற்றுக்கு வேண்டிய பகுதிகளைப் போதியவாறு ஆராய்ந்து எவரும் படித்தறியத் தக்க தெள்ளிய நடையில் எழுதி யிருக்கின்றனர். இதை ஆழ்வார் திருநகரி திரு. பொன். சடகோபராமாநுஜாசாரியார், M. O. L., அவர்கள் பார்வையிட்டு கல் வெட்டுக்களிலிருந்து சிற்சில அரிய பெரிய குறிப்புகளைச் சேர்த்திருக்கிறார்கள், இவ்வாறு எழுதி முடித்த கையெழுத்துப் பிரதியை ஆணையாளர் திரு. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள் பார்த்து ஒப்புக்கொண்ட பின்னர் இஃது அச்சிடப் பெறுவதாயிற்று. சுருங்கிய பக்கங்களில், குறைந்த விலையில் எவரும் படித்துணரத் தக்க வரலாற்றுப் பொருளைக்கொண்டு வெளிவரும் இந்நூல், தமிழகத்தின் பழைய நாகரிகத்தை யறிந்துகொள்ளத் தக்க சாதனமாயிருக்கின்றது.

இவ்வரலாற்றை எழுதிய ஐயர் அவர்களுக்கும், பார்வையிட்டுதவிய ஐயங்கார் அவர்களுக்கும், அன்புகூர்ந்து பார்வையிட்டு ஒப்புக்கொண்ட அறநிலையப் பாதுகாப்பு ஆணையாளர் திரு. கோவை-ம. இராமச்சந்திரன் செட்டியார் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீவைகுண்டம்
19-2-'43

குலசை. வ. சுப்பையா பிள்ளை, B. A.,
எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர்.

# முகவுரை

அன்புடையீர்!

எப்பிறப்பினும் மேலாய மக்கட்பிறப்பெய்தினோர் இறைவனை யுணர்ந்து, வழிபட்டு, ஈறிலாப் பேரின்பம் நுகர்தலே முறை. பாலில் நெய்போல் மறைந்து எங்கும் பரந்துள இறைவன், அடியார் உள்ளத்தும், ஆலயத்தும், அணிபெற அமர்ந்திருப்பன்.

எம்பெருமானது (வியூகங்கள்) ஐந்து. அவற்றில் ஒன்று அர்ச்சாவதாரம். இதுவே யாவரும் எளிதில் வழிபட்டுப் பேரின்பம் எய்தற்குச் சிறந்த சாதனமாகும். மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்களும், அர்ச்சாவதாரமூர்த்தியை, அனுபவித்துப் பாடிப் பதம் பெற்றுளர். ஔவைப் பிராட்டியாரும், "ஆலயந்தொழுவது சாலவும் நன்று", "திருமாலுக் கடிமைசெய்" "தீவினையகற்று" எனக் கூறினர். திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்காரும்;

"கேசவனையே செவிகள் கேட்க திருவரங்கத்
தீசனையே சென்னி இறைஞ்சிடுக—நேசமுடன்
கண்ணனையே காண்க என்கண்கள் இணர்கொள்காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துக என்வாய்"

எனத் திருவாய்மலர்ந்தருளினர். இவ்வுண்மையைக் கண்ட பண்டைத் தமிழ் மன்னர், நாடெங்கும் கோயில்கள் அமைத்து, அவற்றில் வழிபடுவோர்க்கு வேண்டுவன உதவி, செந்நெறிப்படுத்தியுள்ளார்.

மேற்குறித்த கோயில்களில், திருவாழ் மார்பினர் உகந்த தலங்கள் நூற்றெட்டு. ஆழ்வார் பதின்மராலும், ஆண்டாள், மதுரகவி என்ற இருவராலும் சிறப்பித்துப் பாடப்பெற்றவை. இவற்றுள் பதினெட்டு, பாண்டி நாட்டில் உள்ளவை. "பாண்டி பதினெட்டு" என்னும் பழமொழி ஈண்டு நோக்கத்தக்கது.

இப்பதினெட்டில் ஒன்றாய்த் திகழும் ஸ்ரீவைகுண்டத்தில், ஸ்ரீ வைகுண்டநாதர் (ஸ்ரீ கள்ளப்பிரான்) எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் வரலாறு, எவரும் படித்துணர்ந்து, வழிபட்டு, இன்

பெய்தும் வண்ணம், வெளியாக வேண்டுமென்று சென்னை இந்து மத அறநிலையப் பாதுகாப்புக் கழக ஆணையாளர் சைவத்திருவாளர்- ராவ்பகதூர் - கோவை. ம. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள், பி.ஏ., பி.எல். சுற்றறிக்கை மூலம் ஆணையிட்டமைக்கு இணங்க எழுதப் பெறுவதாயிற்று.

இவ்வரலாற்றை ஆணையாளரவர்களின் விருப்பத்தின்படி எழுதப் புகுந்த யான், நவதிருப்பதிகளின் முதலாவதான இக்கோயிலின் பெருமையை உள்ளவாறுணர்ந்து எழுதி முடித்தனன். இக்கோயிலில் எம்பெருமான் 'நின்ற' கோலத்துடன் சேவை சாதிப்பதும், இதற்கடுத்தாற்போல் கிழக்கே சுமார் அரை மைல் தூரத்திலுள்ள நத்தம் என்று வழங்கப்படுகிற ஸ்ரீ வரகுண மங்கை யென்ற தலத்தில் 'இருந்த' கோலத்துடன் சேவை சாதிப்பதும், அதற்கடுத்தாற்போல் அரை மைல் தூரத்தில் திருப்புளிங்குடி யென்ற தலத்தில் 'கிடந்த' கோலத்துடன் சேவை சாதிப்பதும், காண்போர் மனத்தைக் கவரத் தக்கதாய், ஒரே மூர்த்தியே இம்மூன்று தலங்களினும் அமர்ந்துளார் போலவும் இருக்கின்றது.

இக்கோயில் மகாமண்டபத்தில் அக்காலத்திருந்த நெல்வேலிப் பாண்டியர்களில் ஒருவரான வீரபாண்டியத் தேவரால் விடப்பட்ட கல்வெட்டுக் குறிப்புக்கள் விளங்கி வருகின்றன. திருவேங்கடமுடையான் மண்டபத்தில் அரிய பெரிய சிற்பங்கள் கண்ணைக் கவர்வனவாய்த் திகழ்கின்றன. இவ்வகையான வியப்புறும் வேலைப்பாடுகளமைந்துள்ளபடியால் இக்கோயிலையும் இவைபோன்ற வேறு சில கோயில்களையும் ஆங்கில அரசாங்கத்தாரவர்கள் "Ancient Monument Preservation Act" என்று சொல்லப்பட்ட சட்டத்தின் கீழடங்கிய வகுப்பைச் சார்ந்த கோயில்களாகக் கருதி வந்தனர்.

இத்தகைய அருஞ் சிறப்பமைந்த கோயில் வரலாற்றைத் தல புராணம் முதலியவற்றோடு ஆராய்ந்து எழுதுதற்குரிய நூல்களை அவ்வப்போது உதவி இத்திருப்பணி நிறைவேறச் செய்தவர், தேவஸ்தான எக்ஸிக்யூட்டிவ் ஆபீசர் திரு. குலசை. வீ. சுப்பையா பிள்ளை அவர்கள் B. A. இவர்கள் இக்கோயில் திருவாகப்

பொறுப்பை ஏற்ற நாள் தொட்டுப் பொருளாதார கிலேக்கேற்ப, திருப்பணி, நந்தவனம் முதலிய தொண்டுகளில் ஈடுபட்டு எல்லோரை யும் மகிழ்வூட்டி வருவது மிகவும் பாராட்டத்தக்கது.

இவ்வரலாற்றைப் பரிந்து இனிது ஒப்பு நோக்கி உதவிய, சைவப் பற்றும் தமிழ்ப் புலமையும் ஒருங்கமையப் பெற்ற ஆணை யாளர் திரு. கோவை-ம. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள், தமிழகத்திலுள்ள கோயில்களின் அருமை பெருமை, அவற்றைக் குறித்த அருண் மொழிகள், புராண வரலாறுகள், வழிபட்டுப் பேறெய்திய பெரியார்கள் முதலான விவரங்களை யாவரும் உணர்ந்து பயன்பெறச் செய்துவரும் முயற்சி, நாளடைவில், கடவுட்பற்றை யும், ஆன்ம அறிவையும், மக்கள் வாழ்வையும், புனிதப்படுத்துமென் பது வெள்ளிடைமலே. இவர்கள் இப்புனிதமான தொண்டை இடை விடாது புரிய இறைவன் அருள்வாருக. யான் மேற்கொண்ட இச் சிறு பணி நிறைவேறக் காரணமாக இருந்த மேற்கூறிய இருவர் களுக்கும் என் மனமார்ந்த நன்றி உரித்தாகின்றது.


சூத்திரம் போன்று விளங்கும் இச்சிறு நூல் படிப்பவர்க்குப் பெரிதும் பயன்படும். கோயிலேக் குறித்த மேற்கோள்களினின் றும் தொகுக்கப்பெற்ற ஒன்றிரண்டு செய்யுட்கள், படிப்பவரை முழு நூலேயும் பார்க்கத் தூண்டுவனவாகும். இவ்வரலாற்றைப் படித்தறியும் நேயர்கள் குற்றங் களைந்து குணங்கொண்டு போற்றி ஊக்க வேண்டுகிறேன்.

ஸ்ரீ வைகுண்டம்
19-2-'43

மே. வே. நெல்லேயப்பன்,
தமிழாசிரியர், போர்டு உயர்தர ஆண்பாடசாலே,
ஸ்ரீ வைகுண்டம்.

# கோயில் அமைப்புப் படம்

896 ft.



# படத்திலுள்ள எண்ணும் விவரமும்

1. ஸ்ரீவைகுண்டபதி(மூலவர்)
2. ஸ்ரீகள்ளப்பிரான்(உத்ஸவர்)
3. துவாரபாலர்
4. பிரகாரம்
5. சலவை அறை
6. சேனை முதல்வர்
7. கருட வாகனம்
8. சயனக் குறடு
9. பாத்திர அறை வகையரா 4
10. கீழக் கோவில் கருவூலம்
11. கருவூல அறை
12. அறை
13. மணி மண்டபம்
14. வேணுகோபாலன்
15. மஹா மண்டபம்
16. சந்நிதி கருடன்
17. நரசிங்கப்பெருமாள்
18. நிலைக் கண்ணடி
19. அறை
20. ஷை
21. ஷை
22. மடைப்பள்ளி
23. வெஞ்சன அறை
24. கிணறு
25. பகல்பத்து மண்டபம்
26. ஊஞ்சல் குறடு
27. தெற்கு நாய்ச்சியார்
28. பூச்சாத்து மண்டபம்
29. சீவிலி மண்டபம்
30. வடக்கு நாய்ச்சியார்
31. ஷை மண்டபம்
32. சொர்க்கவாசல்
33. மணவாளமாமுனி
34. தசாவதாரம்
35. தேவஸ்தான ஆபீஸ்
36. ஷை அறை (ரிக்கார்டு)
37. ஸ்டோர் அறை
38. தங்கமசகிரி
39. துவஜஸ்தம்பம்
40. பலிபீடம்
41. கிருஷ்ணன் குறடு
42. சங்கன் குறடு
43. வாகன அறை
44. துவஜஸ்தம்ப மண்டபம்
45. கிணறு
46. வசந்த மண்டபம்
47. கண்ணடி மண்டபம் என்ற ராமன்சேர்
48. நெல் களஞ்சியம்
49. மாட்டுத் தொழு
50. மண்டபம் (பழுதானது)
51. நந்தவனப் பிரகாரம்
52. கிணறு
53. ஷை
54. இராப்பத்து மண்டபம்
55. கிணறு
56. திருவேங்கடமுடையான்
57. ஷை குறடு
58. அனுமார்
59. திருவேங்கடமுடையான் மண்டபம்
60. யானை மால்
61. பெரிய கோபுரம்
62. கொத்தமார் அறை
63. சிங்கவாகன அறை
64. பந்தல் மண்டபம் குறடு
65. கடை
66. ஷை
67. பந்தல் மண்டபம்
68. தகரக் கொட்டகை

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | .. 2 |
| | முகவுரை | .. 3 |
| | கோயில் அமைப்புப் படம் | .. 6 |
| | படத்திலுள்ள எண்ணும் விவரமும் | ... 7 |
| 1. | தலவிவரம் இட அமைப்பு | ... 9 |
| 2. | கோயில் | ... 11 |
| 3. | சுற்றுக் கோயில்கள் | ... 17 |
| 4. | சிற்பச் சிறப்புகள் | ... 18 |
| 5. | புராண வரலாறு | ... 20 |
| 6. | சரித்திர வரலாறு | ... 23 |
| 7. | கோயிலின் வரவு செலவு | ... 28 |
| 8. | கோயில் நிர்வாகம் | ... 30 |
| 9. | இலக்கியம் | ... 31 |
| 10. | பாடல்கள் | ... 32 |


## தனிப் படங்கள்


பெரிய கோபுரம் ...

திருவேங்கடமுடையான் மண்டபம்

(முன் பார்வை) ... 13

ஷை (பக்கப் பார்வை) ... 15

ஸ்ரீ



# ஸ்ரீ வைகுண்டம்
# ஸ்ரீ கள்ளப்பிரான் ஸ்வாமி
# கோயில் வரலாறு

---

## I இட அமைப்பு

"செந்தமிழுஞ் சந்தனமும் திசையெலாம் பரிமளிக்க
மந்தவளி உமிழ்மலய வளர்குடுமி நின்றிழிந்து
கொந்தவிழு மலர்வீசிக் குளிர்கொழுமுத் தெடுத்திறைத்து
முந்தஎழு புனற்பொருநை முழுவளத்த தந்நாடு"

**கோயில் இருக்குமிடம், ஜில்லா, தாலுகா,**

இனைய நன்னாட்டிலே, பொருநை நதி (தாமிரபர்ணி)யின் வடகரையிலே, சைவர்கள் திருக்கயிலையென்றும், வைணவர்கள் **ஸ்ரீ வைகுந்தம்** என்றும் அழைக்கப்பெறும் திருப்பதியானது, திருநெல்வேலிக்கும் திருச்செந்தூருக்கும் நடுவே, ஸ்ரீ நம்மாழ்வார் தோன்றியருளிய திருக்குருகூர்க்கு (ஆழ்வார் திருநகரிக்கு) மேல்பால், சுமார் இரண்டு கல் தொலைவில் இருக்கின்றது. இது வைணவ ஆசார்யர்களில் முதல்வரான **ஸ்ரீ நம்மாழ்வா**ரால் பாடப்பெற்று நவதிருப்பதிகளில் முதலாவதாகச் சிறந்து விளங்குகின்றது.

சைவ சமயப் பெரியாராகிய ஸ்ரீ குமரகுருபர அடிகள் தோன்றியருளிய தலமும் இதுவே. அவருடைய திருமடாலய மொன்றும் இங்கு அமைந்துளது. இப்பெயர் கொண்ட தாலுகாவுக்குத் தலைநகரம் இதுவே.

**ரயில் மோட்டார் வசதி**

தென்னிந்தியா இருப்புப் பாதையில், திருநெல்வேலிக்கும் திருச்செந்தூருக்கும் நடுவே **ஸ்ரீ வைகுண்டம்** என்ற ரயில்வே ஸ்டேஷன் இருக்கின்றது. இதிலிருந்து வடக்கே **ஆறு** பர்லாங்கு தொலைவில் ஸ்ரீவைகுண்டம் என்ற நகரமிருக்கிறது. இவ்வூருக்குத் தென்புறம் தாமிரபர்ணி நதி, கிழக்கு முகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்குத் தென் கரையில் புதுக்குடி என்ற கிராமம் இருக்கின்றது. தென் வடல் சுமார் கால் மைல் நீளமுள்ள உறுதியான பாலம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. நதியின் தென்கரையில் உள்ள புதுக்குடி என்ற ஊரின் வழியாக மேற்கே திருநெல்வேலிக்கும் கிழக்கே திருச்செந்தூருக்கும் பெரிய வண்டிப்பாதை ஒன்று போகிறது. ஸ்ரீவைகுண்டத்திலிருந்து தூத்துக்குடி, குலசேகரன் பட்டினம் முதலிய ரயில் வசதியில்லாத இடங்களுக்கு மோட்டார் வண்டிகள் அடிக்கடி போய் வந்துகொண்டிருக்கின்றன.

இவ்வூர், தாமிரபர்ணி சமவெளிப் பிரதேசத்திலிருக்கிறபடியால் இங்கு மலைகளும் குன்றுகளும் கிடையா.

**ஊரைப்பற்றிய விவரம்**

ஆனால் ஊரைச் சுற்றிலும் நதியும் கால்வாய்களும் குளங்களும் இருக்கின்றன. ஊருக்கு வடதிசையிலும் கீழ்த்திசையிலும் அழகிய நெல் வயல்கள் பரந்திருக்கின்றன. சுமார் 10000 ஜனத்தொகை கொண்ட இந்நகர

மானது ஸ்ரீ வைகுண்டம் பஞ்சாயத்து போர்டு ஆட்சி யில் இருந்து வருகிறது.

சத்திரங்கள் சாவடிகள்

இவ்வூரின் மேல் கோடியில், வடக்கே, ஜில்லா போர்டு சத்திரம் ஒன்றும், புதுக்குடியில் கோட்டைப் பிள்ளைமார் சத்திரம் ஒன்றும், செவ்வனே நடைபெற்று வருகின்றன. இவற்றில் வழிப்போக்கர்களுக்கு இட வசதியும் உணவு வசதியும் உண்டு. இவையன்றி, ஸ்ரீ கள்ளப் பிரான் ஸ்வாமி தேவஸ்தானத்திலேயே தினம் நான்கு வழிப்போக்கர்களுக்குப் போதுமான உணவு வசதியும் செய்யப்பட்டு நடந்து வருகிறது. சத்திரங்கள் தவிர, புதுக்குடியில் (Rest house) என்னும் 'தங்குமிடம்' ஒன்றும், முசாரி பங்களா ஒன்றும், உத்தியோகஸ்தர் களின் பொருட்டு அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வூரின் வடக்கு எல்லையில் ஸ்ரீ கைலாசநாத ஸ்வாமி கோயில் என்ற சிவன் கோயிலொன்றிருப்ப தால் அதைச் சுற்றியுள்ள பகுதிக்குக் 'கைலாசபுரம்' என் றும் பெருமாள் கோயிலைச் சுற்றியுள்ள ஏனைய இடங் களுக்கு 'ஸ்ரீ வைகுந்தம்' என்றும் பெயர்கள் வழக் கத்திலிருந்து வருகின்றன.

## II கோயில்

கோயிலின் தோற்றம்

ஊருக்கு மேல் பாரிசத்தில் பொருநை நதிக்கரை யின் மேல், கிழக்கு நோக்கி ஸ்ரீ வைகுண்டபதிப் பெரு மாள் கோயில் தனது வானளாவிய கோபுரத்தினாலும், உயர்ந்த மதிற்சுவர் களாலும், பூலோக வைகுண்டமெனத் திகழ்கிறது. இதை ஸ்ரீ கள்ளப்பிரான் ஸ்வாமி கோயில் என்றும் அழைப்பதுண்டு. கோபுரம் ஒன்பது தட்டுக்

களைப் பெற்றுளது. அதில் அமைக்கப்பட்டுள்ள பல அரிய சிற்ப வேலைகள் காண்போர் மனத்தைக் கவர்கின்றன. கோயிலின் மதிற்சுவரின் நீளம் 580 அடி. அதன் அகலம் 396 அடி. கோபுர உயரம் 110 அடி.

ஸ்ரீ வைகுண்ட நாதர் சந்நிதி, ஸ்ரீ வைகுண்ட வல்லித்தாயார் சந்நிதி, ஸ்ரீ சோரநாயகித் தாயார் சந்நிதி ஆகிய மூன்றும் கோயிலினுள்ளிருக்கும் சிறப்பான பகுதிகள்.

**கோயிலின் பல பகுதிகள்**

மூலஸ்தானம் எனப்படும் கர்ப்பக்கிருகத்தில், ஸ்ரீ வைகுண்ட நாதர் ஏகாந்தமாக 'நின்ற திருக்கோலத்துடன்'. கையில் கதையுடன் திவ்விய சேவை தந்தருள்கிறார். பகவத் கைங்கரியபரரான ஸ்ரீ ஆதிசேஷன் அவருக்குக் குடையாக விளங்குகிறார். சாளக்கிராமசிலாபிம்பமானதால் இவருக்குப் பிரதிதினமும் பால் திருமஞ்சனம் ஏற்பட்டிருக்கிறது. கர்ப்பக்கிருகம் வெகுதூரம் உள்ளடங்கியிருந்த போதிலும் உத்தராயணத்தில் ஒரு தடவையும், தக்ஷிணாயனத்தில் ஒரு தடவையும், (அதாவது சித்திரைமீ 6வ ஐப்பசிமீ 6வ) சூரிய ரச்மி பகவானுடைய திருமுக மண்டலத்தில் வீசுகிறது. இது மிகவும் வியக்கத்தக்கது.

இரண்டாவதாக, வெளிக்கர்ப்பக் கிருகத்தில் ஸ்ரீ பூமி சமேதராக ஸ்ரீ சோர நாதர் (கள்ளப்பிரான்) என்னும்

**உத்ஸவர் சந்நிதி**

உத்ஸவ மூர்த்தி ஒரு பொற் சப்பரத்தில் எழுந்தருளியிருக்கிறார். கையில் கதையுடனும் அழகிய விலை மதிக்க முடியாத சுவர்ண கவசத்துடனும் கூடிய இவரது திருமேனி சௌந்தர்யத்தில் ஈடுபடாதவர் யாவர்?

மூன்றாவதாக, மணி மண்டபத்தில் துவாரபாலர் இருவர் இருக்கின்றனர். இவர்களுக்கு முன்பாகப்



திருவேங்கடமுடையான் மண்டபம் (முன் பார்வை)

பொற்றகட்டிஞல் வேயப்பட்ட சயனக் குறடும்,

**மணி மண்டபம்**

இடது பக்கத்தில் சேனை முதலியார் சந்நிதியும், வலது பக்கத்தில் கருவூல அறையும் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

நான்காவதான மஹா மண்டபத்தில் ஸ்ரீ வேணுகோபாலன் சந்நிதியும், கருடாழ்வார் சந்நிதியும் இருக்கின்றன.

**மஹா மண்டபமும் சுற்றுக் கோயில்களும்**

இதற்கு வெளியேயுள்ள நாய்ச்சியார் பிராகாரத்தில் தென்புறம் ஸ்ரீ வைகுந்த வல்லித் தாயாரும், வடபுறம் ஸ்ரீ சோர நாயகித் தாயாரும் எழுந்தருளியிருக்கின்றனர். இவர்களும் சாளக் கிராமச் சிலைகளே.

இதே பிராகாரத்தில் ஈசான்யத்தில் ஸ்ரீ மணவாள மாமுனிகள் சந்நிதியும் தசாவதார சந்நிதியும், அக்கினி மூலையில் ஸ்ரீ யோக நரசிங்கர் சந்நிதியும் இருக்கின்றன. கோயில் திருமடைப் பள்ளியும் இதற்குத் தென்புறம் இருக்கிறது.

துவஜஸ்தம்ப மண்டபம் வெகு அழகானது.

**துவஜஸ்தம்ப மண்டபம்**

அதற்கு வடக்கே திருவேங்கட முடையான் சந்நிதியும் அதை யொட்டிப் பெரிய மண்டபமும் மிக அழகாய் அமைந்திருக்கின்றன.

இக்கோயிலில் விசேஷமான பிராகாரங்கள் இல்லை. திருமதிலின் புறத்தேயுள்ள மாடவீதி முதற் பிராகாரமாகும்.

**பிராகாரங்கள்**

இந்தப் பிராகாரத்தின் மேற்பகுதி தாமிரபர்ணி நதியின் கரையே. திருமதிலுக்குட்புறம் நந்தவனப் பிரகாரம் உளது. இது இரண்டாவதாகும்.

இந்தப் பிராகாரத்தில் கண்ணுடி மண்டபமும், சுவர்க்க மண்டபம் திருவேங்கட முடையான் மண்டபம்



திருவேங்கடமுடையான் மண்டபம் (பக்கப் பார்வை)

என்பனவும், அமைந்துள்ளன. இதற்கடுத்தாற்போ லுள்ள நாய்ச்சியார் பிராகாரம் மூன்ருவதாகும். திறந்த வெளியான தளவரிசைப் பிராகாரம் நான்காவதாகும். கர்ப்பக் கிருகத்தைச் சுற்றியுள்ளது ஐந்தாவது பிராகார மாகும்.

கர்ப்பக் கிருகத்தில், நின்ற திருக்கோலத்துடன் திவ்ய சேவை தந்தருள்பவர் ஸ்ரீ வைகுண்ட நாதர். இவருக்கு இப்பெயர் வரக்காரணம் பின் வருமாறு:—

**மூர்த்திகளும் பெயர்கள் ஏற் பட்ட காரணமும்**

முற்காலத்தில் சோமுகன் என்ற ஓர் அசுரன், பிரம தேவரிடமிருந்த வேதத்தைத் திருடிப் போயினன். பிறகு பிரமன் பெருங் கவலைக்குள்ளாகிப் பூலோகம் வந்து, தாமிரபர்ணியில் கலச தீர்த்தத்தில் நீராடி, ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைக் குறித்துத் தவம் புரிந்தனன். அது கண்ட பகவான், அவருக்குப் பிரத்தியட்சமாகி, அவர் குறையைக் கேட்டு, சோமுகாசுரனிடமிருந்த வேதங்களை மீட்டிக் கொடுத்தனர். உடனே நான்முகன் பரம சந்தோஷமடைந்து அவருக்கு "ஸ்ரீ வைகுண்ட நாதர்" என்ற திருநாமத்தைச் சூட்டினர்.

உத்ஸவ மூர்த்தியாகிய ஸ்ரீ கள்ளப் பிரானுக்கு அத்திருநாமம் ஏற்பட்ட காரணம் பின் வருமாறு:—

**கள்ளப்பிரான்**

முன் காலத்தில் கால தூஷகன் என்ற ஓர் திருடன் தினந்தோறும் ஸ்ரீ வைகுண்ட நாதரிடம் வந்து "ஸ்வாமி! நான் வெளியே திருடப் போகிறேன். என்னை இன்னுனென்று ஒருவரும் அறியக் கூடாதபடி தாங்கள் தயை புரியவேண்டும். எனக்குக் கிடைப்பதில் பாதியை உமக்குத் தருகிறேன். இது நிச்சயம்" என்று கூறிவிட்டு திருடப் போவது

வழக்கம். அவர் அவனது வேண்டுகோளின்படி அவனைக் காத்தருளும் பொருட்டுச் சோரரூபம் தரித்துச் 'சோர நாதர்' அல்லது 'கள்ளப்பிரான்' என்னும் திருநாமம் பெற்றார்.

பிருது தீர்த்தம், கலச தீர்த்தம் என்ற இரண்டும் இக்கோயிலை யடுத்துள்ளன. இரண்டு தீர்த்தங்களும் தாமிரபர்ணி தீர்த்தந்தான். இவை தம்மிடம் நீராடுவோரது பாவங்களைப் போக்கடிக்கின்றன.

**தீர்த்தங்கள்**

நதிக்கரை யோரமாக இக்கோயிலைச் சார்ந்த பெரிய தெப்பக்குளமொன்றிருக்கிறது. இதில், தை மாதத்தில் தெப்போத்ஸவம் வெகு விமரிசையாக நடைபெறுவதுண்டு.

## III சுற்றுக் கோயில்கள்

ஸ்ரீ வேணுகோபாலன் சந்நிதி, ஸ்ரீ கருடாழ்வார் சந்நிதி, ஸ்ரீ நரசிங்கப்பெருமாள் சந்நிதி, ஸ்ரீ மணவாள மாமுனி சந்நிதி, ஸ்ரீ திருவேங்கடமுடையான் சந்நிதி என்பன கோயிலுக்குள்ளிருப்பவை. ஞானப்பிரான் சந்நிதியும், அரசாழ்வார் சந்நிதியும் கோயிலுக்கு வெளியே இருக்கின்றன. இவை தவிர, வெளியிலுள்ள நதிக்கரை ஸ்ரீ கிருஷ்ணன் கோயில், ஸ்ரீ முத்தாரம்மன் கோயில், ஸ்ரீ குருநாதன் கோயில், ஸ்ரீ நல்லாப்பிள்ளை பெத்தம்மன் கோயில், தோழப்பன் பண்ணை ஸ்ரீ பொய் சொல்லா மெய்யசாஸ்தா கோயில், மருதூர் ஸ்ரீ மருதவல்லி அம்மன் கோயில், முதலிய கோயில்களும் உள. இவற்றிற்குப் பூஜை முதலிய கைங்கரியங்களுக்கு இந்த

தேவஸ்தானத்திலிருந்து பதிவாகப் பணம் பட்டுவாடா வாகி வருகின்றது.

## IV சிற்பச் சிறப்புகள்

**கல்சிற்பம் :**—வடமலையப்ப பிள்ளையனால் மதுரை நாயக்க அரசருதவியைக் கொண்டு, கோபுரவாயிலி னுட்புறம், தெற்கு நோக்கிக் கட்டப்பட்டுள்ள திருவேங் கடத்தான் சந்நிதி மண்டபம் சிறந்த கற்சிற்ப வேலை யுடையது. 5 அடி அகலமுள்ள பெரிய யாளித் தூண் களையுடையது. தூண்களில் தெய்வ உருவங்கள், பக்த ருருவங்கள், அழகாயமைந்திருக்கின்றன. இவற்றில் பலவற்றிற்குத் தென்கலைத் திருமண்களிருக்கின்றன. மேல்புறம் பிக்ஷாடன மூர்த்தி, தென்புறம் வேடுவன் வேடுவச்சி, கோவர்த்தனோத்தாரண கோபாலன், வேணு கோபாலன், நம்மாழ்வார், மதனகோபாலன், ரதி மன் மதன் முதலியவர்களின் சிற்றுருவங்கள், திண்ணையின் விளிம்பில், பரிவாரங்களுடன் அமைக்கப் பட்டிருக் கின்றன. முன் பக்கம் மத்தியிலுள்ள நான்கு தூண் களில், மேல்கடைத் தூணில் அகோர வீரபத்திரருருவ மும், கீழ்க் கடைத்தூணில் கோணங்கி வீரனுருவமும், மத்தியில் வாயிலிருபுறமும், 8 அடி உயரத்தில் இடது கையில் கோதண்டமேந்தி நிற்கும் இரண்டு இராம ருருவங்களும் அமைக்கப் பட்டிருக்கின்றன. கீழ்ப்புற முள்ள ராமருக்கு இடதுகைப் பக்கம் சுக்ரீவன் நிற் கிறான். வலது கையால் அனுமாரைத் தழுவிக்கொண்டு நிற்கிறார். மேல் புறம், ராமர் இடது கையாற் கோதண் டத்தைத் தாங்கிக் கொண்டும் வலது கையால் சுக்ரீ

வனைத் தழுவிக்கொண்டும் பாதக்குறட்டின் மேல் நிற்கிறார். இடது புறம் சீதையும், வலது விலாப் பக்கத்தில் மேற்கு நோக்கி விபீஷணனும் நிற்கிறார்கள். ராமனுக்கும் ராமனைச் சேர்ந்தவர்களுக்கும் நீண்ட தென்கலை நாமங்களிருக்கின்றன. கொடி மரத்தின் கீழ்ப்புறம் குறட்டுத் தூண்களும் கொடியேற்று மண்டபமும் அழகிய சித்திர வேலைப்பாடுடையன. மடைப்பள்ளி வாயிலில் கருங்கல்லில் பழைய காலத்துத் தென்கலைத் திருமண் முதலியவை அழகாய்ச் செதுக்கப் பட்டிருக்கின்றன. சில மண்டபங்களினுச்சி விளிம்பில் நம்மாழ்வார் வகையரா சேர்க்கை பிம்பங்கள் அழகாயமைந்திருக்கின்றன.

கர்ப்பக் கிருகத்தை யடுத்துள்ள பிராகாரத்தில் நூற்றெட்டுத் திவ்ய தேசங்களில் எம்பெருமான் சேவை

**வர்ணச் சித்திரம்**

சாதித்து வருவதுபோல் அழகிய வர்ணச் சித்திரங்கள் சுவரில் வரையப் பெற்றுள்ளன. கோயிலின் முகப்பில் வரையப்பெற்ற "ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்" என்ற வர்ணச்சித்திரம் பார்ப்பவரைப் பிரமிக்கச் செய்கிறது. கொடி மரத்தின் கீழ்ப்புறம் குறட்டின் மேல் பாகத்தில், நவதிருப்பதி சுவாமிகளினுருவங்களும் ஸ்ரீ ஆண்டாள், மன்னார் உருவங்களும் வர்ணத்தால் அழகா யெழுதப்பட்டிருக்கின்றன.

சித்திரை மாதத்தில் நடைபெறும் பிரமோத்ஸவத்தில் எம்பெருமான் திருத்தேரில் ஆரோகணித்து அடியார்கட்குச் சேவை சாதித்து வருவதுண்டு. இத்தேர், பலவித மரச் சிற்ப வேலைப்பாடுகளையுடையது. இது இவ்வூர் கோட்டைப் பிள்ளைமார்களில் ஒருவரான காலஞ்சென்ற திரு. பரமசிவன் பிள்ளை (காசிப் பிள்ளை) அவர்களின் முயற்சியால் ஆக்கப்பெற்றது.

இக்கோயிலிலுள்ள விமானத்திற்கு இந்திர விமானம் என்று பெயர். இது விமானங்களில் மிகச் சிறந்தது. தங்கஸ்தூபியை யுடையது. இந்த விமானம் 15 அடி உயரமுள்ள தட்டட்டியின்மேல் 23 அடிச் சவுக்கத்தில் ஆரம்பித்து 27 அடி உயரத்தில் ஒரே தங்கஸ்தூபியில் முடிகிறது.

**வாகனங்கள் :—**

1. தங்கத் தோளுக்கினியன்
2. தங்கக் கருட வாகனம்
3. ,, சேஷ வாகனம்
4. ,, குதிரை வாகனம்
5. ,, திருமஞ்சனச் சப்பரம்
6. வெள்ளித் தோளுக்கினியன்
7. ,, சிங்க வாகனம்
8. ,, ஹநுமார் வாகனம்
9. மரத்தில் புஷ்பக விமானம்
10. ,, யானை வாகனம்

ஆக மொத்தம் சுமார் ரூ. 80000 பெறுமான திருவாபரணங்களும் வாகனங்களும் இருக்கின்றன.

## V புராண வரலாறு

**பிரமனது வரமும் பகவான் காட்சியும்**

1. முன் ஒரு பிரளயத்தில் ஸோமுகன் என்ற அசுரன் ஒருவன் பிரம தேவரிடமிருந்த வேதத்தைப் பறித்துச் சென்றனன். உடனே பிரம தேவர் பெருங்கவலை யடைந்து பூலோகத்தில், தமிழ் முனிவன் எனப்பெறும் அகஸ்தியர் வாழும் பொதிகை மலையிலிருந்து உற்பத்தியாகிப் பாய்கிற தாமிரபர்ணி நதியின்

வடகரையில் உள்ள வைகுந்த வனத்திற்கு வந்து, கலச தீர்த்தத்தில் மூழ்கி, எம்பெருமானைக் குறித்துப் பல வருடங்கள் தவம் புரிந்தனர். இவரது தவத்திற்குப் பெரிதும் மகிழ்ந்து, ஸ்ரீமந் நாராயணன், இவருக்குத் திவ்யமான காட்சி தந்து இவரது வேதத்தைச் சோமுகாசுரனிடமிருந்து மீட்டிக்கொடுத்தனர். பிறகு சதுர்முகன் அவருக்கு "ஸ்ரீ வைகுண்ட நாதர்" என்னும் திருநாமத்தைச் சூட்டித் தமதுலகம் சென்றனன்.

II பிறகு காலதூஷகன் என்னும் திருடர் தலைவன் ஒருவன், பிரதி தினமும் பகவானிடம் வந்து "சுவாமி!

**காலதூஷகன்**

நான் வயிற்றுத்திரத்தின் பொருட்டு வெளியே திருடப் போகிறேன்; ஒருவரும் என்னை இன்னுனென்று உணராமற் செய்யவேண்டியது உமது பொறுப்பு; நான் அதற்குப் பதிலாக எனக்குக் கிடைக்கும் பொருளில் பாதியை உமக்கு அர்ப்பணம் செய்வேன்; அதைத் தாம் அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும்" என்று கூறிவிட்டுத் திருடப்போவது வழக்கம்.

ஒரு நாள் அவன் தனது சகாக்களுடன் இவ்வூர் அரசன் அரண்மனையிற் புகுந்து திருடினுன். அரண்மனைக் காவலாளர்கள், அவர்களைப் பிடித்துக் கொண்டனர். அவர்கள், காவலாளர்களிடம், "எங்களை விட்டு

**பகவானது எளிமை**

விடுங்கள். எங்கள் தலைவனைக் காட்டி விடுகிறோம்" என்று சொல்லி அவர்களைக் கூட்டிக் கொண்டு காலதூஷகனைத் தேடிச் சென்றனர். இதற்குள், பரமகாருண்யராகிய ஸ்ரீ வைகுந்தநாதர், திருடன்மீது, இரக்கமுடையவராய்

அவனைப்போல் மாறுவேடம் பூண்டு இவர்களைச் சந்தித்தனர். இதையறியாத சேவகர்கள், அவரைக் காலதூஷகனாகவே கருதி, அவரைப் பிடித்துக் கொண்டுபோய் மன்னன் முன் நிறுத்தினர்.

இவரைப் பார்த்த மாத்திரத்தில் அரசன் ஏதோ பித்துப் பிடித்தவன் போல் ஆனான். சிறிது நேரத்தில் இவன் காலதூஷகனல்லன் என்று தெரிந்து கொண்டான். பிறகு பகவான் அரசனுக்குத் திவ்விய ஞானத்தைக் கொடுத்ததுமன்றித் தாமும் இன்னாரென்று தெரிவித்தார். மீண்டும் அரசனை நோக்கித் "தருமத்தில் செலவிடப்படாத பொருள், கள்வரைச் சேர்ந்தது, இதைக் குறித்து வருந்தாதே" என்றார்.

**பகவான் உபதேசம்**

இவ்விதம் தன்னையாட் கொண்டவரான ஸ்ரீ வைகுண்ட நாதரிடம் அரசன் விசேஷ பக்தி உடையவனாய், அவருக்குத் திருக் கோயில் முதலியன கட்டுவித்துச் 'சோர நாதன்' அல்லது 'கள்ளப் பிரான்' என்ற திருநாமத்தையும் சூட்டினன்.

**அரசன் திருப்பணி**

இவ்வூரில் உள்ள கலச தீர்த்தத்தில் மூழ்கி ஸ்ரீ வைகுண்ட நாதரைச் சேவிப்பவர், பிரமஹத்தி முதலான சகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு இகபர செளக்கியங்களை யடைவார்கள்.

**மூர்த்தியைச் சேவிப்பதன் பயன்**

இந்தக் கோயிலில் அஷ்டோத்தரசதம், ஸஹஸ்ர நாமம் முதலிய அர்ச்சனைகள் நடைபெறுகின்றன. பிரதி தினமும் எம்பெருமானுக்குப் பால் திருமஞ்சனமும் நடைபெற்று வருகிறது.

**அர்ச்சனை**

உத்ஸவங்கள்

வருஷந்தோறும் சித்திரை மாதத்தில் பிரமோத்ஸவமும், ஆவணி மாதத்தில் திருப்பவித்ரோத்ஸவமும், மார்கழி மாதத்தில் திருப்பல்லாண்டு உத்ஸவமும், தைமாதத்தில் தெப்போத்ஸவமும், மற்றும் பல சிறு உத்ஸவங்களும் நடைபெற்று வருகின்றன.

## VI சரித்திர வரலாறு

கோயிலினுட் பக்கம் மகா மண்டபத்தில் சிறந்த சிற்ப வேலைகளும், அக்காலத்திருந்த திருநெல்வேலிப் பாண்டியர்களில் ஒருவரான வீரபாண்டியத் தேவரால் வெட்டப்பட்ட சிலாசாஸனங்களும் இருக்கின்றன. இவை கி. பி. 1438-ல் வரையப்பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளன. 1895-ம் வருஷத்தில் ஆங்கில அரசாங்கத்தாரால் தெரிந்தெடுக்கப்பட்டு 177 and 178-வது நம்பர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள இரு பிரதிகள் மட்டும் கீழே வரையப் பெற்றுள்ளன.

No. 117 of 1895

1 ஸ்வஸ்தி ॥ ஸ்ரீ திர ள வநவசு வர்த்தி கொநெறிமெல்
வ த
கொண்டான் திரு வழுதி வளநாட் -

2 டு ஸ்ரீவைகுந்தத்து கள்ளப்பிரான் கோயிலில்
திருப்பதியில் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு வல்ல
நாடான ஜயங்-

3 கொண்ட பாண்டிய நல்லூரில் பற்றிலெதே வபிரான்
தாதர்க்கு மடப்புறமாக அவ்வூர்ப்படிகார் பசானம்
விளையும் நி -

4 லத்திலெ அஞ்சுமா நிலம் முதலடங்க இறையிலியாகக் குடுத்து நம்வரியிலார் கணக்கிலும் கழித்துக் குடுக்கச் சொன்

5 ஞெம் இப்படிக்கு நம் ஓலை பிடிபாடாகக்கொண்டு இன்றன் கெல்லைகளிலும் திருவாழிக்கல்லும் நாட்டிக் கொண்டுவஷ்ஞ்ா

6 தித்த வக செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க யாண்டு ௩௰௯ வது, நாள் ௩௱௰௫ இவை மிழலைக் கூற்றத்

7 து நடுவில்க்கூற்று துஞ்சலூ(ர்) ருடையான் .........காங்கையனை பல்லவராயன் எழுத்து இவை துஞ்சலூ(ர்) ரு

8 டையான் செனை முதலி சவரிப்பெருமாள் எழுத்து உ

No. 178 of 1895

1 பீகாஷதி சத ௩ள சயக-ன்மெல்ஷஷி ஸ்ரீ கொமாறுவன் மரானதிர ஹுவனச்சகு வத்தி திருநெல்வெலிப் பெருமாள் ஸ்ரீ வீரபாண்டியதெவற்கு யாண்டு இரண்டா -

2 2-வதின் எதிர்பதி னெழாவது ஆடிமாதம் ௩௰௧௨ திருவழுதி வளநாட்டு ஸ்ரீவைகுந்தத்து நாயினார் கள்ளப்பிரான் கொயிலில் திருப்பதி வைஷ்ணவர்

3 களுக்கு இன்று யினார்க்கு வைகாசித் திருநாள் நெடுநாளாக நடவாமல் கிடக்கையில் சதையத்து நாள் துடங்கி எழுந்தருள இம்மாதத்தில் நம்மு -

4 டைய ஆட்டைப் பிறந்த நாள் திருவாதிரையிலெ தீர்த்தம் பிறசாதிக்கக் கற்பித்து இதுக்கு இவ்வூர் வட பிடாகையில் இந்த நாயினார்க்கு முன்பு

5 விட்ட திருவிடை யாட்டமும் உஷா பூசைக்கு
நம் பேரால் வீரபாண்டியன் சந்தியாக
நாள் ஒன்றுக்கு அமுதுபடி நானாழியாக நடந்து
போகக்கற்பித்து இதுக்குசி ராகவன் (சாசனக்
குறிப்பு இத்துடன் முடிவடைகிறது.)

மற்றைய சிலாசாசனங்கள் ஆழ்வார் திருநகரி பொன். சடகோப ராமாநுஜாசாரியார், M. O. L. அவர்களாற் பார்த்தெழுதப்பட்டு அவற்றின் சுருக்கமாத்திரம் கீழே எழுதப்பட்டிருக்கின்றன.

1. No. 177 of 1895 தேவர்பிரான் தாதருக்கு கோனேரிமேல் கொண்டான் வல்ல நாட்டில் அஞ்சுமா நிலம் மடப்புற இறையிலியாகக் கொடுத்தது.

2. No. 178 of 1895 திருநெல்வேலிப் பெருமாள் வீர பாண்டியத் தேவர், தான் பிறந்த வைகாசித் திருவாதிரை யில் தீர்த்தவாரி நடக்கும்படி வைகாசித் திருநாள் ஏற் படுத்தி, அதற்காக இவ்வூர் வட பிடாகை ஸ்ரீ பராங்குச நல்லூரர் நிலம் விட்டது.

3. (தெற்கோரம் மத்திய பாகம்) தேவர் பிரான் தாதர் செய்த 'சேரனை வென்றான்' திருநந்தவனத்துக்கு இவ்வூர் மேல் பிடாகையில் திருநந்தவனப் புறமாக நிலம் இறையிலியாய் விட்ட பிடிபாடோலை.

4. திருவரங்கப் பெருமாள் பல்லவராயர் பிரதிட்டை பண்ணின வைகுந்த வல்லி நாய்ச்சியார் ஆராதனத்துக்காக கற்குளத்தில் விட்ட நிலத்தை இறையிலியாக்கிக் கொடுக் தது.

5. சடாவர்மன் குலசேகரர் காலத்து சவுரிப் பெரு மாள் சீயர் செய்வித்த நந்தவனத்துக்கு, அருமொழி தேவன் கச்சியராயன் நிலம் தர்மதானமாகக் கொடுத்தது.

6. சோணாடு கொண்ட மா - சுந்தர பாண்டியத் தேவர் காலத்தில் பொன் பற்றியுடையான் மொண்ணைப் பிரான் அழகப் பெருமாளான விழுப்பாதராயர் கள்ளப் பிரானுக்கு சந்தியா தீபத்துக்காக சீ பண்டாரத்தில் இரண்டச்சு (பொன்) முதல் வைத்தது.

**அரசருருவங்கள் (Royal-images)** :—வைகுந்த வல்லித்தாயார் சந்நிதிக்கு வடபுறம், அத்யயன உற்சவ மண்டபக் குறட்டில், ஒவ்வொரு தூணிலும் 6 அடி உயரத்தில் மதுரை அரசருருவங்கள் கூப்பிய கையுடன் நிற்கின்றன. பரமபத வாசல் வடபுறம் ஷெ யுருவங்கள் சிறியவையா யிருக்கின்றன. கோபுரத்தின் மேல் புறம் கற்கட்டிடத்தின்மேல் ஓர் அரசனுருவமமைக்கப் பட்டிருக்கிறது. இவைகள் மிகுந்த அழகான வேலைப்பாடுடையன.

## முக்கிய திருப்பணிகளும் செய்தோரும்

I மதுரை யரசர்திகாரி, காவை வடமலையப்ப பிள்ளையன் கைங்கர்யங்கள் :—

1. திருவேங்கடத்தான் மண்டபம்
2. வசந்த மண்டபத்தில் ராமன் பிரதிஷ்டை
3. ஆற்றங்கரைக் குமாரக் கடவுள்
4. மண்டபங்கள் தட்டோடு போட்டு ஆற்றங்கரையில் வரிக்கல்லும் கட்டினது
5. கண்டசரம்
6. கிளிப் பதைக்கம்
7. சக்கரப் பதைக்கம்

முதலிய திருவாபரணங்கள்.

8. தசாவதாரப் பிரதிஷ்டை
9. காசினி வேந்தன் பிரதிஷ்டை

முதலியன.

II பிள்ளைப் பெருமாள் கைங்கர்யம் :—

1. முன் பந்தல் மண்டபம். 2. வசந்த மண்டபம். 3. தோப்பு மண்டபம். 4. ஆற்று மண்டபம். 5. கல்வரி. 6. இடிந்த மதில் செப்பம். 7. திருத்தேர். 8. ரத்ன வங்கி. 9. பொய்கைக் குளம். 10. சீவலப்பேரியில் நிலங்கள் முதலியன.

III எல்லார்க்கும் நல்லான் கைங்கர்யம் :—

1. மடைப்பள்ளி. 2. வல்ல குளம் முள்ளாடி குளம். 3. அனுமார், கருடன், யானை வாகனங்கள். 4. தேர், தேர் முட்டி. 5. நெற்குத்துப் பரை. 6. நெற்களஞ்சியம். 7. பந்தல் மண்டப நடுக்குறடு. 8. ஞானப்பிரான் சந்நிதி. 9. திருமஞ்சனப் படித்துறை. 10. கோபுரம், பெரிய திருமதில். 11. திருவாபரணங்கள்.

IV சொக்கலிங்கம் கைங்கர்யம் :—

1. ஆண்டாள் சந்நிதி. 2. சக்கரத் திருத்தேர். 3. தெப்பக்குளம். 4. திருமலை பூபால சமுத்திர அக்ரகாரம் முதலானவை.

ஒரு காலத்தில் இந்தக் கோயில், கிழக்கு இந்தியா கம்பெனியாருக்கு ஒரு சிறந்த கோட்டையாக நின்றுதவியது. அதாவது கி. பி. 1801-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில், கட்டபொம்ம நாய்க்கன் வகையரா, கம்பெனியாரை

எதிர்த்துத் தாக்கிய காலத்தில, இக்கோயிலானது கம பெனியாருக்கு எதிர்பாராத விதமாகவும், ஆச்சரியப் படக்கூடிய விதமாகவும், ஓர் உன்னத அரணாக விளங்கி யது.

**தனிப்பெருங் கோட்டை :**—இக்கோயிலுக்கு வட பாகத்தில் நகரத்தின் வடக்கு எல்லையில் சுமார் 20 ஏக்கர் நிலத்தில் 12 அடி உயரமும் 12 அடி கனமும் உள்ள மண் சுவர்க் கோட்டை ஒன்று அமைந்திருக் கின்றது. அதில் வசிப்பவர்கள் கோட்டைப் பிள்ளை மார்கள் எனப்படுவர். இவர்கள் ஒரு தனிப்பட்ட வகுப்பினர். கட்டுப்பாடு மிகுதியுமுடையவர்களாதலால் இவர்களின் பெண்பாலர்கள் மட்டும் ஒருக்காலும் கோட்டைக்கு வெளியே வரமாட்டார்கள். வெளியி லுள்ள மற்ற ஆடவர்கள் எவரும் கோட்டைக்குள்ளே செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

## VII கோயிலின் வரவு செலவு

வருஷம் ஒன்றுக்குச் சராசரி வருவாய் ரூ. 11000/ இதில் ரூ. 7800/வரை சர்க்கார் தஸ்திக் தொகையாக வாங்கப்படுகிறது. பாக்கித்தொகை, தேவஸ்தானத்துக் குப் பாத்தியப்பட்ட 32 ஏக்கர் இருபூ நஞ்சை நிலத்திலி ருந்தும், மற்றும் கடைகள் முதலிய சில்லரை அயிட்டங் களிலிருந்தும் கிடைக்கப் பெறுகிறது. உண்டியல், கட் டளை, முதலிய வரும்படிகள் மிகவும் சொற்பமே. நஞ்சை புஞ்சை முதலிய ஸ்தாவர ஜங்கம சொத்துக்க ளெல்லாம் சேர்ந்து, சுமார் ஒரு லக்ஷம் ரூபாய் பெறுமான ஆஸ்தி இக்கோயிலுக்கு இருக்கிறது.

| | | |
|---|---|---|
| செந்திலாம் பண்ணை நஞ்சை நிலம் ஏ. | 32 37 | ரூ. 25000 |
| ஸ்ரீ வைகுண்டம் கஸ்பா ,, ,, | செ. 85 | 700 |
| ஷை ஷை புஞ்சைத் தோப்பு | | 100 |
| கட்டடங்கள் | | 1000 |
| திருவாபரண வகையராக்கள் | | 80000 |
| | ஆக ரூ. | 106800 |

மொத்த வருவாயில் வருஷம் ஒன்றுக்கு நித்திய பூஜைக்கு ரூ. 3000/செலவாகிறது. திருவிழாக்களுக்கு ரூ. 3000/செலவாகிறது. தேவஸ்தான சிப்பந்திகள் வகைக்கு ரூ. 2400/செலவு ஏற்படுகிறது. இவை தவிர திருப்பணி முதலிய விசேஷச் செல்வுகளும் சிறிது சிறிதாகப் பண வசதிக்குத் தக்கவாறு நடைபெறுகின்றன. யானை யொன்றும், சதா இந்த தேவஸ்தானத்தில் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

**கட்டளைகள்**

தினசரி காலை சந்தி பண்டியாஜீயார் கட்டளை, அனுஷக் கட்டளை, தேவர் பிரான் தாஸர் கட்டளை சுக்கிரவாரக் கட்டளை முதலியவை நடைபெற்று வருகின்றன. இவை தவிர, துவாதசிக் கட்டளை, திருப்பள்ளியெழுச்சிக் கட்டளை, உத்ஸவ காலங்களில் மண்டபப்படி முதலிய கட்டளைகளும் நடைபெற்று வருகின்றன.

**உபயங்கள்**

தங்கத் திருமங்கல்யம், வெள்ளிக் கண்மலர் போன்ற சிற்சில சிறு ஆபரணங்களும், பட்டுப் பருத்திகளாலான ஆடைகளும் சாதாரணமாக உபயமாக வருவதுண்டு.

இன்னும் பசு, காளை முதலான கால் நடைகளும் சிற்சில சந்தர்ப்பங்களில் உபயமாகக் கொடுப்பாரும் உளர்.

பிரதி வருஷமும் வெகு விமரிஸையாகக் கொண்டாடப் பெறுவது சித்திரை மாதத்துப் பிரமோத்ஸவமே.

உத்ஸவங்கள்

இதற்குச் சுமார் ரூ. 1500/வரை செலவாகிறது. இது தவிர, ஆவணி மாதத்தில் திருப்பவித்திரோத்ஸவமும், மார்கழி மாதத்தில் திருவத்யயன உத்ஸவமும், தை மாதத்தில் தெப்போத்ஸவமும், இன்னும் பல சிறு உத்ஸவங்களும் நடைபெற்று வருகின்றன. உத்ஸவம், ஆட்ட விசேஷம், மாத விசேஷம், முதலியவற்றிற்கு விவரம் கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேவஸ்தானத்தில் நடத்தப்படும் அர்ச்சனைகளில் அஷ்டோத்தர சதத்துக்கு ரூபா. 0-2-6-ம் ஸஹஸ்ர நாமத்துக்கு 0-5-0-ம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதில், முதல் அயிட்டத்திற்கு ரூ. 0-0-6-ம் இரண்டாவது அயிட்டத்திற்கு ரூ. 0-1-0-ம் கோவிலுக்கும், மீத முள்ளவை அர்ச்சகர், உபாத்தியாயர்களுக்கும், வீதம் கொடுத்துக் கணக்கிடப்படுகிறது.

அர்ச்சனை

## VIII நிர்வாகம்

வெகு காலமாக இக்கோயிலின் ஆளுகை தூத்துக்குடி ஸர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டியின்கீழ் இருந்து, மூன்று தர்மகர்த்தர்கள் மேல் பார்வையில் நடைபெற்றது. பின்னர் 1939-ம் வருஷத்தில், மதராஸ் இந்துமதபரிபாலன போர்டாரவர்களால் "நோட்டிபை" செய்யப்பட்டு

கோயில் நிர்வாகம்

எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர் நியமிக்கப் பெற்றனர். அதன் பிறகும், எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸருடன் மூன்று ஹானரரி தர்மகர்த்தர்கள் நியமிக்கப்பெற்று நிர்வாகம் நடந்து வருகிறது.

இப்போது மேலே கண்ட ஹானரரி தர்மகர்த்தர்களில் இருவர் விலகிக்கொண்டபடியாலும், மூன்றுவதான திரு. ச. ராமநாராயண பிள்ளை (கோட்டை) அவர்களுக்கு நியமுக காலம் முடிவடைந்து விட்டபடியாலும் கோயிலின் நிர்வாகமானது எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர் திரு. K. V. சுப்பையா பிள்ளை, B. A., அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

இக்கோயிலின் திருவாபரணங்கள் முதலியன அடங்கிய கருவூலத்திற்கு நிர்வாகஸ்தர்கள் எட்டுப் பேர்களுண்டு. வெளியிலுள்ள ஸ்தலத்தார் தவிர, தேவஸ்தான எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸரிடமும் ஒரு திறவுகோலுண்டு. மேலே கண்ட எட்டு நிர்வாகஸ்தர்களில் அனுக்கர்ணம் என்றும் திருமடிவிளாகம் என்றும் இரண்டு நிர்வாகஸ்தர்கள் தேவஸ்தானத்திலிருந்தே நியமிக்கப்பெற்றுள்ளனர்.

## IX இலக்கியம்

1. ஸ்ரீ வேதவியாச மஹா முனிவர் இயற்றிய பதினெண் புராணங்களில் ஒன்றான பிரமாண்ட புராணத்தில் உள்ள நவதிருப்பதி மான்மியம், ரிட்டயர்ட்ஸப் ஜட்ஜ் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்களால் புத்தக ரூபமாக வெளியிடப் பெற்றுள்ளது. இதில் ஸ்ரீ வைகுண்ட மான்மியம் முதலாவதாக இருக்கிறது.

2. தாமிரபர்ணி ஸ்தல புராணத்திலும் ஸ்ரீ வைகுண்ட மான்மியம் காணப்படுகிறது. இது இன்னும்

அச்சுவாகனம் ஏறவில்லை. மேற்கூறிய இரண்டும் வடமொழியில் உள்ளன.

3. நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் ஒரு பாட்டு,

4. வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ்,

5. ஷ்டி தாலாட்டு,

6. திருவாய்மொழி,

7. ஸ்ரீ வைகுண்டம் திருப்பணிமாலை,

8. அநந்த கிருஷ்ணையங்கார் தனிப்பா மஞ்சரியில் ஒரு பாட்டு,

9. 108 திருப்பதித் தாலாட்டு,

10. திருநெல்வேலி ஜில்லா Gazateer,

முதலிய நூல்கள் ஸ்ரீ வைகுண்டத்தைப் பற்றிக் கூறுகின்றன.

## X பாடல்கள்

ஆழ்வார்களில் தலைசிறந்தவரும் பிரபன்ன ஜன கூடஸ்தருமான ஸ்ரீ நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழியில், திருப்புளிங்குடியைப் பற்றிய பாசுரங்கள் பத்தும் இருக்கின்றன, அவற்றுள், அடியிற்கண்ட ஒரு பாசுரத்தில், ஸ்ரீ வைகுண்டத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

" புளிங்குடிக் கிடந்துவரகுண மங்கையிருந்து
வைகுந்தத்துள் நின்று
தெளிந்தவென் சிந்தை யகங்கழியாதே
யென்னையாள் வாயெனக் கருளி
நளிர்ந்த சீருலகம் மூன்றுடன் வியப்ப
நாங்கள் கூத்தாடி நின்றார்ப்பப்
பளிங்குநீர் முகிலின் பவளம்போல்
கனிவாய்சிவப்ப நீ காணவாராயே!"

2. தென்கலை வைணவரான திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்கார் அவர்கள் அருளிச் செய்த நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில், ஸ்ரீ வைகுண்டத்தைப் பற்றிய பாடல் ஒன்றுளது. அது பின் வருமாறு :—

" தாருடுத்துத் தூசுதலைக் கணியும் பேதையிவள்
நேருடுத்த சிந்தை நிலையறியேன் - போருடுத்த
பாவைகுந்தம் பண்டொசித்தான் பச்சைத்துழாய் நாடுஞ்
சீவைகுந்தம் பாடும் தெளிந்து "

இன்னும் இதுபோன்ற அழகான செய்யுட்கள் 'திருப்பணி மாலை', 'நம்மாழ்வார் நூற்றெட்டு திருப்பதித் தாலாட்டு', 'திருவைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ்' முதலிய நூல்களில் பரக்கக் கிடக்கின்றன. அவற்றுள் சில அடியில் குறிக்கப் பெற்றிருக்கின்றன.

3. திருப்பணிமாலை

" நவபதிக்குள் முதற்பதியாம் திருவைகுந்தச்
சோர நாதர்க் கன்பாய்
புவனியில் வைகாசி விழாத்திருத்தேர்தன்
விதியிலே புதிதாய்ச் செய்தான்
யவன மடவியர் மோகன்
குமாரசுவாமி மன்னன் இறைபாலன்
சிவனணைஞ்ச பெருமாள் நங்குமார
சுவாமியைப் பெற்றதிடவில் வேளே "

4. நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு

" வளமார் திருக்குருகை வாய்த்த துலைவில்லி மங்கை
கிளர்ஸ்ரீவர மங்கை கீர்த்தி புனைதென்பேரை
அளியார் திருவை குந்தம் அன்பிற் புளிங்குடியும்
துளவார் கார்முகிலைச் சொல்லும் பராங்குசனே "

5. திருவைகுந்த நாதன் பிள்ளைத் தமிழ்

'நிறையுங் கலைகள் மருவுஞ் சசியை
நிகர்த்த வதனன் வருகவே
நிருகன் சாபந் துடைத்து மகிழும்
நிமலன் வருக வருகவே

நறைவண் டுளப மாலை யணியு
நம்பன் வருக வருகவே
நாரிபாகன் வேத னெவர்க்கு
நாதன் வருக வருகவே

உறியில் வெண்ணெய் திருடியுண்ட
வுதரன் வருக வருகவே
உரல்பின் றொடரத் தவழுங்கனக
வோங்கல் வருக வருகவே

மறைகள் பரவு முபயசரண
வரதன் வருக வருகவே
வாசங்கமழும் திருவைகுந்தை
மாயன் வருக வருகவே.''

சித்தர்புகழ் கேசவாநாரணு மாதவா
சீர்மருவு கோவிந் தனே
திகிரியணி விண்டுவே மதுசூத னுநெடிய
திருவிக்ரமாவாமனு

அத்திமரு விக்கண்வளர் சிதராதொண்டருக்
கருள்புரியு மிருடி கேசா
அயனைப் பெறும்பதும னுபா தாமோதரா
அகிலகா ரணனே யெனக்

கொத்தவிழ்மலர்க்குழல சோதைபனி மொழியினற்
கூவிமடி மீது வைத்துக்
கொஞ்சி முலையூட்டி நீராட்டி மகிழ்வதுகண்டு
குறுமுறுவல் கொள்ளு மணியே !

பத்தருடன் விளையாடு நித்தமுகில் வண்ணநீ
பவள்வாய் முத்த மருளே
பன்னுமறை யோர்தொழுந் தென்வைகுந் தைக்கள்வ
பவளவாய் முத்த மருளே ''

பிள்ளைத் தமிழ், திருப்பணிமாலை என்ற இந்நூல்களின் ஆசிரியர்கள் இன்னாரென்று தெரியவில்லை.

## அம்மானை ஸ்ரீ வைகுண்டம்

7. வாரிநலப் பொருநை வைகுந்தம்வாழ் திருமால்
சீரிய பொன்னுடையுறும் செல்வன்காண் அம்மானை
சீரிய பொன்னுடையுறும் செல்வனே யாமாகில்
காரிகையா ராடை கவர்வனோ? அம்மானை
கள்ளப் பிரான்தான் கவரானோ அம்மானை.

இவ்வம்மானை பாடியவர் தென் திருப்பேரை
வித்துவான் – உ. வெ. ஸ்ரீ அநந்த கிருஷ்ணையங்கார்.

## உத்ஸவங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆவணி திருப்பவித்திர உத்ஸவம் | நாள் | 8 |
| 2. | புரட்டாசி நவராத்திரி உத்ஸவம் | ,, | 10 |
| 3. | ஷை ஊஞ்சல் உத்ஸவம் | ,, | 5 |
| 4. | மார்கழி திருவத்யயன உத்ஸவம் | ,, | 21 |
| 5. | தை உத்ஸவம் | ,, | 12 |
| 6. | ஷை தெப்ப உத்ஸவம் | ,, | 2 |
| 7. | சித்திரை உத்ஸவம் (தேர்) | ,, | 10 |
| | | ஆகநாள் ... | 68 |

## ஆட்ட விசேஷம்

| | | |
|---|---|---|
| 1. பெரியாழ்வார் (திருநட்சத்திரம்) சுவாதி | | ஆனி மாதம் |
| 2. பஞ்சபேரர் அமாவாசை | | ஆடி மாதம் |
| 3. திருவாடிப்பூரம் சூடிக்கொடுத்த நாய்ச்சியார் பூரம் | | ,, |
| 4. திருவாடி சுவாதி சந்நிதி கருடன் சுவாதி | | ,, |
| 5. திருவாடி உத்ராடம் ஸ்ரீ ஆளவந்தார் உத்ராடம் | | ,, |
| 6. ஸ்ரீ ஜயந்தி & உறியடி 2 நாள் | | ஆவணி |
| 7. புரட்டாசி சனி வாரங்கள் 4 | | புரட்டாசி |
| 8 திருவேங்கடமுடையார் (திருநட்சத்திரம்) திருவோணம் | | ,, |
| 9. சந்திரகிரகணம் | | |
| 10. சரஸ்வதி பூஜை | | ,, |
| 11. விஜயதசமி | | ,, |
| 12. ஐப்பிசி விஷு பஞ்சபேரர் | | ஐப்பசி |
| 13 கார் திருநாள் கதிர் | | ,, |
| 14. தீபாவளிப் பண்டிகை | | ,, |
| 15. மணவாளமாமுனிவர் (திருநட்சத்திரம்) மூலம் | | ,, |
| 16. துவாரபாலகாள் | ஷை மூலம் | ,, |
| 17. சேனை முதல்வர் | ஷை பூராடம் | ,, |
| 18. பொய்கையாழ்வார் | ஷை திருவோணம் | ,, |
| 19. பூதத்தாழ்வார் | ஷை அவிட்டம் | ,, |
| 20. பேயாழ்வார் | ஷை சதயம் | ,, |
| 21. ஆட்ட அசுவதி, உத்ஸவர் (திருநட்சத்திரம்) அசுவதி | | ,, |
| 22. கைசிக ஏகாதசி | | கார்த்திகை |
| 23. ஷை துவாதசி | | ,, |
| 24. திருமங்கையாழ்வார் (திருநட்சத்திரம்) கார்த்திகை | | ,, |
| 25. திருக்கார்த்திகை | | ,, |

26. திருப்பாணுழ்வார் (திருநட்சத்திரம்) ரோகணி கார்த்திகை
27. தொண்டரடிப்பொடியாழ்வார் ஷ்டி கேட்டை மார்கழி
28. பெரியநம்பி சுவாமி ஷ்டி கேட்டை ,,
29. கூடாரவில்லிஞ்சீர் ஷ்டி ஷ்டி ,,
30. திருப்பள்ளியெழுச்சி ,,
31. தை மாதப் பிறப்பு தை
32. கணு ,,
33. தை அமாவாசை பஞ்சபேரர் ,,
34. திருமழிசையாழ்வார் (திருநட்சத்திர.) மகம் ,,
35. சூரிய கிரகணம்
36. பிசானம் திருநாள் கதிர் ,,
37. மூலவர் (திருநட்சத்திரம்) அனுஷம் ,,
38. கும்பாபிஷேகத் தினம் ரேவதி ,,
39. திருக்கச்சிநம்பி (திருநட்சத்திரம்) மிருகசீரிஷம் மாசி
40. குலசேகர ஆழ்வார் ஷ்டி புனர்பூசம் ,,
41. யுகாதி பண்டிகை தெலுங்கு வருஷப் பிறப்பு பங்குனி
42. திருக்கோடை பங்குனி மாதமுதல் நாள் 45 பங்குனி
43. சித்திரை விஷு பஞ்சபேரர் சித்திரை
44. உடையவர் (திருநக்ஷத்திரம்) திருவாதிரை ,,
45. மதுரகவியாழ்வார் ஷ்டி ,,
46. சித்திரா பௌர்ணமி ,,
47. பால்மாங்காய் வைகாசிப் பௌர்ணமி வைகாசி
48. ஆழ்வார் திருநகரி 5-ம் உத்ஸவம் ,,
49. ஜேஷ்டாபிஷேகம் கேட்டை ,,
50. முப்பழம் ஆனிமாதப் பிறப்பு ஆனி

## மாதவிசேஷம்

1. மாதப் பிறப்பு (புறப்பாடு) 12
2. ஏகாதசி (ஷ்டி) 24

| | | | |
|---|---|---|---|
| 3. | சுக்கிரவாரம் | | 52 |
| 4. | கடைசி சுக்கிரவாரம் | (புறப்பாடு) | 13 |
| 5. | அசுவதி | (ஷ) | 13 |
| 6. | ரோகணி | | 13 |
| 7. | திருவாதிரை | | 13 |
| 8. | பூரம் | | 13 |
| 9. | உத்திரம் | | 13 |
| 10. | சுவாதி | | 13 |
| 11. | அனுஷம் | | 13 |
| 12. | திருவோணம் | | 13 |
| 13. | மூலம் | | 13 |
| 14. | அமாவாசை | | 13 |